# பெப்ரவரி - 03 - வெள்ளி

## புனித அன்ஸ்காரர் பிளாசியுஸ்

"நான் உன்னைக் கைவிடமாட்டேன் உன்னை விட்டு விலகமாட்டேன்" (எபி.13:5)

-----------------------------------------------------------------

### முதல் வாசகம்: ஏபிரேயர்13:1 – 8

சகோதர சகோதரிகளே! சகோதர அன்பில் நிலைத்திருங்கள். அன்னியரை வரவேற்று விருந்தோம்ப மறவாதீர்கள். இவ்வாறு விருந்தோம்பியதால் சிலர் தாங்கள் அறியாமலே வான தூதர்களை மகிழ்ச்சிப் படுத்தியதுண்டு. சிறைப்பட்டவர்களோடு நீங்களும் சிறைப்பட்டிருப்பதாக எண்ணி அவர்களை நினைத்துக் கொள்ளுங்கள். துன்புறக்கூடிய உடல் உங்களுக்கும் உள்ளதால், துன்புறுத்தப் படுபவர்களை மறவாதீர்கள். திருமணத்தை அனைவரும் உயர்வாக மதியுங்கள். மணவறைப் படுக்கை மாசுறாமல் இருக்கட்டும். காமுகரும் விபசாரத்தில் ஈடுபடுவோரும் களவுளின் தீர்ப்புக்கு ஆளாவர். பொருளாசையை விலக்கி வாழுங்கள். உள்ளதே போதும் என்றிருங்கள். ஏனெனில், "நான் ஒருபோதும் உன்னைக் கைவிடமாட்டேன்! உன்னை விட்டு விலகமாட்டேன்" என்று கடவுளே கூறியிருக்கிறார்.இதனால், நாம் துணிவோடு, "ஆண்டவரே எனக்குத் துணை, நான் அஞ்சமாட்டேன் மனிதர் எனக்கு எதிராக என்ன செய்யமுடியும்?" என்று கூறலாம்.உங்களுக்குக் கடவுளின் வார்த்தையை எடுத்துச்சொன்ன உங்கள் தலைவர்களை நினைவுகூருங்கள். அவர்களது வாழ்வின் நிறைவை எண்ணிப் பார்த்து, நீங்களும் அவர்களைப்போல நம்பிக்கையுடையவர்களாய் இருங்கள்.இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றுமே மாறாதவர்.

**பதில்பாடல் :** ஆண்டவரே என் ஒளி அவரே என் மீட்பு

### நற்செய்தி: மாற்கு 6:14 - 29

அக்காலத்தில் இயேசுவின் பெயர் எங்கும் பரவியது. ஏரோது அரசனும் அவரைப்பற்றிக் கேள்வியுற்றான். சிலர், "இறந்த திருமுழுக்கு யோவான் உயிருடன் எழுப்பப்பட்டு விட்டார் இதனால் தான் இந்த வல்ல செயல்கள் இவரால் ஆற்றப்படுகின்றன" என்றனர். வேறு சிலர், "இவர் எலியா" என்றனர். மற்றும் சிலர், "ஏனைய இறைவாக்கினரைப்போல இவரும் ஓர் இறைவாக்கினரே" என்றனர். இதைக்கேட்ட ஏரோது, "இவர் யோவானே. அவர் தலையை நான் வெட்டச்செய்தேன். ஆனால் அவர் உயிருடன் எழுப்பப்பட்டுவிட்டார்" என்று கூறினான். இதே ஏரோது, தன் சகோதரனான பிலிப்பின் மனைவி ஏரோதியாவை மனைவியாக்கிக் கொண்டிருந்தான் அவள் பொருட்டு ஆளனுப்பி யோவானைப் பிடித்துக்கட்டிச் சிறையில் அடைத்திருந்தான். ஏனெனில் யோவான் ஏரோதிடம், "உம் சகோதரர் மனைவியை நீர் வைத்திருப்பது முறை அல்ல" எனச் சொல்லிவந்தார். அப்போது ஏரோதியா அவர்மீது காழ்ப்புணர்வு கொண்டு, அவரைக் கொலை செய்ய விரும்பினாள் ஆனால் அவளால் இயலவில்லை. ஏனெனில் யோவான் நேர்மையும், தூய்மையும் உள்ளவர் என்பதை ஏரோது அறிந்து அஞ்சி அவருக்குப் பாதுகாப்பு அளித்து வந்தான். அவர் சொல்லைக்கேட்டு மிகக்குழப்பமுற்ற போதிலும், அவருக்கு மனமுவந்து செவிசாய்த்தான். ஒரு நாள் ஏரோதியாவுக்கு நல்ல வாய்ப்பு ஒன்று கிடைத்தது. ஏரோது தன் பிறந்த நாளில் அரசவையினருக்கும், ஆயிரத்தவர் தலைவர்களுக்கும் கலிலேய முதன்மைக் குடிமக்களுக்கும் ஒரு விருந்து படைத்தான். அப்போது ஏரோதியாவின் மகள் உள்ளே வந்து நடனமாடி ஏரோதையும் விருந்தினரையும் அகமகிழச் செய்தாள். அரசன் அச்சிறுமியிடம், "உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள், தருகிறேன்" என்றான். "நீ என்னிடம் எதுகேட்டாலும், ஏன் என் அரசில் பாதியையே கேட்டாலும் உனக்குத் தருகிறேன்" என்றும் ஆணையிட்டுக் கூறினான். அவள் வெளியே சென்று, "நான் என்ன கேட்கலாம் ?" என்று தன்தாயை வினவினாள். அவள், "திருமுழுக்கு யோவானின் தலையைக் கேள்" என்றாள். உடனே சிறுமி அரசனிடம் விரைந்து வந்து, "திருமுழுக்கு யோவானின் தலையை ஒரு தட்டில் வைத்து இப்போதே எனக்குக் கொடும்" என்று கேட்டாள். இதைக் கேட்ட அரசன் மிகவருந்தினான். ஆனாலும் விருந்தினர் முன் தான் ஆணையிட்டதால் அவளுக்கு அதை மறுக்க விரும்பவில்லை. உடனே அரசன் ஒரு காவலனை அனுப்பி யோவானுடைய தலையைக் கொண்டுவருமாறு பணித்தான். அவன் சென்று சிறையில் அவருடைய தலையை வெட்டி, அதை ஒரு தட்டில் கொண்டுவந்து அச்சிறுமியிடம் கொடுக்க, அவளும் அதைத் தன் தாயிடம் கொடுத்தாள். இதைக் கேள்வியுற்ற யோவானுடைய சீடர்கள் வந்து அவருடைய உடலை எடுத்துச் சென்று ஒரு கல்லறையில் வைத்தார்கள்.

**தியானம்:** மண்ணிலே மனிதனாக உருவெடுத்த இறைமகன் இயேசு எங்கள் கூடவே இருக்கின்றார் என்பதை ஏற்றுக் கொண்டு மகிழ்ந்து கொண்டிருக்கும் நாங்கள். என்றும் திடமான மனநிலையுடன் ஆண்டவராகிய இயேசு எங்கள் கூடவே இருக்கின்றார் என்பதை உணர்ந்து வாழ வேண்டும் என்று எபி.13:6ம் வசனத்தில் "ஆண்டவரே எனக்குத் துணை நான் யாருக்கும் அஞ்சமாட்டேன், மனிதர் எனக்கு என்ன செய்யமுடியும்". என்று கூறுவதைப் பார்க்கின்றோம். இவ்வார்த்தையின் படி மனிதரால் முடியாத காரியம் இறைவனால் மட்டுமே முடியும் என்பது ஆணித்தரமாக விளங்கிக் கொள்ளக் கூடியதாக உள்ளது. மனிதன் முகத்தை மட்டுமே பார்க்கின்றான். ஆனால் இறைவனோ எமது உள்ளத்தை பார்க்கின்றவர். நாங்கள் எவ்வகையான வாழ்க்கை வாழ்கின்றோம் என்பதை அறிந்து எம்மைக் கைவிடாமல் மார்போடு அணைத்துக் காத்துக்கொள்வார். ஆனால் எமது பாவங்களின் நிமித்தம் அவரை விட்டு விலகி ஏற்றுக்கொள்ளத் தயங்கி விடுகின்றோம். காரணம் எம் ஒவ்வொருவரினதும் குடும்பம், உறவுகள், நணபர்கள் மூலமாக ஏற்படும் தீய எண்ணங்கள், பேச்சுக்களால் உறவுகள் சிதைந்து போய் காணப்படுவதால் விடுதலைபெற முயற்சியாது விட்டு விடுகின்றோம். அன்று ஏரோதியா யோவானை கொலை செய்ய பலமுறை முயற்சி செய்தும் முடியாமற் போக மகளின் மூலமாக கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தனது திட்டத்தை நிறைவேற்றி விடுகின்றாள். இதே போன்று எங்களில் சிலரும் பலவிதமான செய்யக்கூடாத செயல்களில் ஈடுபட்டு பலவிதத்தில் மக்களைத் தாக்குவதோடு மட்டமல்லாது, ஒன்றும் செய்ய இயலாது விடத்த இறுதியாக கொலை செய்வதற்கே தயங்காமல் சந்தர்ப்பம் பர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறான நிலையிலிருந்து நாங்கள் மாறுபட்ட வாழ்க்கை வாழவேண்டும். எனவே எந்த நிலையிலும் இயேசு எங்கள் கூடவே இருக்கின்றார் என்பதை உணர்ந்து வாழ்வோம்.